ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1656/10 - 2010 මැයි 31 වැනි සඳුදා - 2010.05.31

*1656/10 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**பற்றிக் தொழில்**

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33 (1) (அ) ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சர் அவர்களினால் ஆக்கப்பட்டு, 1979 ஆண்டு ஒகத்து மாதம் 03 ஆம் திகதிய 48 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் தொழில் ஆணையாளர் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு இணங்க மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 33(2) ஆம் பிரிவின் கீழ் பற்றிக் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தொடர்பாக இதனுடன் உள்ள அட்டவணையிற் காணப்படும் நேர வேலைக்கான ஆகக் குறைந்த சம்பள அளவு தொடர்பான தீர்மானம், கௌரவ தொழில் உறவுகள், உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சரவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச் சட்டத்தின் 33(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இத் தீர்மானம் 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.*

மஹிந்த மடிஹஹேவா,
செயலாளர்,
தொழில் உறவுகள், உற்பத்தித்திறன்
மேம்பாட்டு அமைச்சு.

கொழும்பு 5.
*2010, மே 31.*

**அட்டவணை**

தொழில் ஆணையாளரால் பதிக் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் தொடர்பாக நிறைவேற்றப்பட்டதும், 1979ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதிய 64/22 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளனவும் 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1556/ 4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் இறுதியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளனவுமான தீர்மானங்கள், அவ்வட்டவணைக்கு, கீழ் காணப்படும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-

"பற்றிக் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு I ஆவது நிரலில் குறிப்பிட்டுள்ள நேர வேலைக்கு உரித்தான ஆகக் குறைந்த சம்பள வீதம் II வது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாதல் வேண்டும்.

| | நிரல் I | நிரல் II<br>சாதாரண வேலைநாள் ஒன்றிற்குரிய சம்பள வீதம்<br>ரூபா. ச. |
|---|---|---|
| (அ) | சித்திரம் வரைவோர், வடிவுருவங்களமைப்போர் | 420.00 |
| (ஆ) | வெள்ளாவியிடுவோர், சாயமிடுவோர் | 360.00 |
| (இ) | இஸ்திரிக்கையிடுவோர், உருவப்பிரதி செய்வோர், மெழுகிடுவோர் | 330.00 |

**சாதாரண வேலை நாள்**

சாதாரண வேலை நாள் ஒன்றில் அடங்கியிருக்கும் மணித்தியாலங்கள் (உணவுக்கான அல்லது ஓய்வுக்கான மணித்தியாலம் ஒன்று உட்பட)

| | | |
|---|---|---|
| (அ) | சனிக்கிழமை தவிர்ந்த பிற நாட்களில் | 9 மணித்தியாலங்கள் |
| (ஆ) | சனிக்கிழமை நாட்களில் | 6 மணித்தியாலங்கள் ” |

6- 307/1

---

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### ஆரம்பப் பாடசாலைச் சேவைத் தொழில்

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33 (1) (அ) ஆம் பிரிவின் கீழ் கௌரவ தொழில் அமைச்சர் அவர்களினால் கட்டளையிடப்பட்டு 2000 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதிய 1120/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினால் தொழில் ஆணையாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு ஏற்ப மேலே கூறப்பட்டுள்ள கட்டளைச் சட்டத்தின் 33 (2) ஆம் பிரிவின் கீழ் ஆரம்பப் பாடசாலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள், உதவியாளர்கள் தொடர்பாகக் கீழ் காணப்படும் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள குறைந்த சம்பள அளவு தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில் உறவுகள், உற்பத்தி திறன் மேம்பாட்டு அமைச்சர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ளதென மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 33 (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 (3) பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானங்கள் 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவனவாகும்.

மஹிந்த மடிஹஹேவா,
செயலாளர்,
தொழில் உறவுகள், உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சு.

கொழும்பு 05,
2010, மே 31.

**அட்டவணை**

தொழில் ஆணையாளரினால் ஆரம்பப் பாடசாலைச் சேவைத் தொழில் தொடர்பாக ஆசிரியர்கள், உதவியாளர்களுடைய நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பளம் தொடர்பாக 2000 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1138/29 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவற்றை காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டவையும் கடைசியாக 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1556/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் வேறுபடுத்தப்பட்டவையுமான இத்தீர்மானங்கள் அட்டவணைக்குப் பதிலாக பின்வரும் அட்டவணையைப் பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-

**“அட்டவணை**

| நிரல் I<br>(பிரதேசம்) | நிரல் II<br>(தொழில்) | நிரல் III<br>(ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம்)<br>ரூபா . ச. |
|---|---|---|
| மாநகர சபை எல்லையினுள் | (அ) ஆசிரியர்கள் | 7,800.00 |
| | (ஆ) உதவியாளர்கள் | 6,000.00 |
| நகர சபை எல்லையினுள் | (அ) ஆசிரியர்கள் | 6,990.00 |
| | (ஆ) உதவியாளர்கள் | 5,580.00 |
| பிரதேச சபை எல்லையினுள் | (அ) ஆசிரியர்கள் | 5,640.00 |
| | (ஆ) உதவியாளர்கள் | 4,590.00 |

மேலே (ஆ) குறியீட்டினால் காட்டப்பட்டுள்ள சேவைகளும் மேலே (அ) குறியீட்டினால் காட்டப்பட்டுள்ள சேவைகளுடன் தொடர்புடைய தற்காலிக அல்லது வேறு யாதாயினும் சேவைகள் இருப்பின் அவைகளும் இதில் அடங்கும்.”

6- 307/2

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழில்

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33 (1) (அ) ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சர் அவர்களினால் ஆக்கப்பட்டு 1979 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதிய 58 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் தொழில் ஆணையாளர் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு இணங்க மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 33 (2) ஆம் பிரிவின் கீழ் கண்ணாடித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தொடர்பாக இதனுடன் உள்ள அட்டவணையிற் காணப்படும் நேர வேலைக்கான ஆகக் குறைந்த சம்பள அளவு தொடர்பான தீர்மானம், கௌரவ தொழில் உறவுகள், உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என அக்கட்டளைச் சட்டத்தின் 33 (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.

மஹிந்த மடிஹஹேவா,
செயலாளர்,
தொழில் உறவுகள், உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சு.

கொழும்பு 5.
2010, மே 31.

### அட்டவணை

தொழில் ஆணையாளரால் கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நேரவேலைக்கான ஆகக்குறைந்த வேதனத்திற்காக 1980 ஆம் ஆண்டு யூன் மாதம் 26ஆந் திகதிய 94/6 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டதும் கடைசியாக 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1556/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் வேறுபடுத்தப்பட்டதுமான தீர்மானங்கள் அவ்வட்டவணைக்குப் பின்வரும் புதிய பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்பட வேண்டும்:-

“ I ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவர்களான கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழிலிலுள்ள தொழிலாளர்களுக்குப் பொருத்தமான நேரவேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் அதற்கெதிராக II ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறிருத்தல் வேண்டும்.

| | நிரல் I<br>தொழிலாளர் வகுப்பு | நிரல் II<br>சாதாரண வேலைநாள் ஒன்றிற்குரிய ஆகக் குறைந்த சம்பள வீதம்<br>ரூ. ச. |
|---|---|---|
| (அ) | ஊதலுருவம் செய்வோர், இயந்திரங்கள் இயக்குவோர் | 408.00 |
| (ஆ) | இயந்திரங்கள் இயக்குவோருக்கு உதவுவோர், குமிழ் உருவம் செய்வோர், வெட்டுவோர், ஊதலுருவம் செய்வோருக்கு உதவுவோரும் சூளையாளருக்கு உதவுவோரும் | 360.00 |
| (இ) | உருக்கி மட்டஞ்செய்வோர், வாயு செலுத்துவோர், அழுத்துநர், குமிழ் உருவம் செய்வோருக்கு உதவுவோர் | 342.00 |
| (ஈ) | கனிஷ்ட குமிழ் உருவம் செய்வோர், உருவத்தினை சமநிலை செய்வோர், கடைச்சற்காரர், எண்ணுவோர் | 330.00 |
| (உ) | கண்ணாடி வெட்டுவோர், சிமினி வெட்டுவோர், மட்டமாக்குவோர். | 318.00 |
| (ஊ) | அடுக்கிக் கட்டுவோர், கொண்டுசெல்வோர் | 300.00 |

### சாதாரண வேலை நாள்

சாதாரண வேலை நாள் ஒன்றில் அடங்கியிருக்கும் மணித்தியாலங்கள் (உணவுக்கான அல்லது ஓய்வுக்கான மணித்தியாலம் ஒன்று உட்பட)

| | | |
|---|---|---|
| (அ) | சனிக்கிழமை தவிர்ந்த பிற நாட்களில் | 9 மணித்தியாலங்கள் |
| (ஆ) | சனிக்கிழமை நாட்களில் | 6 மணித்தியாலங்கள்” |

6- 307/3

2- G 12912

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### சுத்திகரிப்புச் சேவைத் தொழில்

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் சுத்திகரிப்பு சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபைகளினால் ஆக்கப்பட்டனவும் இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ளனவுமான தீர்மானங்கள், கௌரவ தொழில் உறவுகள், உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சர் அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 1 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.

மஹிந்த மடிஹஹேவா,
செயலாளர்,
தொழில் உறவுகள், உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சு.

கொழும்பு 5,
2010, மே 31.

### அட்டவணை

1993 ஆம் ஆண்டு யூலை மாதம் 7 ஆந் திகதிய 774/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1556/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினால் கடைசியாக வேறுபடுத்தப்பட்டுள்ள சுத்திகரிப்பு சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபையின் தீர்மானங்கள் பின்வரும் பாகங்களை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படும் :-

"பகுதி I

#### சாதாரண வேலை நாளுக்கான வரைவிலக்கணம் (பிரிவு 24)

1. சாதாரண வேலை நாளொன்றிற்கான மணித்தியாலங்களின் எண்ணிக்கையானது, உணவு அல்லது ஓய்விற்கான ஒரு மணித்தியாலம் உள்ளடங்கலாக பின்வருமாறு அமையலாம்.

| | | |
|---|---|---|
| (அ) | வாரத்தின் எந்த ஐந்து நாட்களிலும் | 9 மணித்தியாலங்கள் |
| (ஆ) | எந்த ஒரு நாளில் (குறுகிய நேர நாள் வேலை) | 6 மணித்தியாலங்கள் |

பகுதி II

#### சாதாரண வார வேலை (பிரிவு 24)

2. சாதாரண வார வேலைக்கான மணித்தியாலங்களின் எண்ணிக்கை 45 மணித்தியாலங்களை விஞ்சுதலாகாது.

பகுதி III

#### வாராந்த விடுமுறை (பிரிவு 24)

தொழில்தருநர் ஒவ்வொருவரும் அவருக்கு கீழ் பணிக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாளர் ஒவ்வொருவருக்கும் எந்தவொரு கிழமையிலும் குறுகிய நேர வேலை நாளினைத் தொடர்ந்து வருகின்ற நாளை வார விடுமுறை நாளாக அனுமதிப்பர் எவ்வாறாயினும், கீழ்வருகின்ற நிபந்தனைகளுக்கமைவாக தொழில்தருநர் எந்தவொரு வேலையாளரையும் அத்தகைய வாராந்த விடுமுறை நாளில் பணிக்கமர்த்தலாம்.

வாராந்த விடுமுறை நாளில் செய்யப்பட்ட வேலைக்காக வேலையாளருக்குச் செலுத்தக்கூடிய ஊதியமானது.

(அ) முதல் 9 மணித்தியாலங்கள் வேலைக்கு (உணவு அல்லது ஓய்விற்கான ஒரு மணித்தியாலம் உட்பட) ஆகக்குறைந்த நாளாந்த சம்பளத்தின் 1 1/2 மடங்காக இருக்கும்.

(ஆ) சாதாரண வேலை மணித்தியாலங்களை விஞ்சுகின்ற ஒவ்வொரு வேலை மணித்தியாலத்திற்கும் மணித்தியாலம் என்ற வீதத்தில் (ஆகக்குறைந்த நாளாந்த சம்பளத்தை 8 ஆல் பிரித்துப் பெறப்பட்டது) 1 1/2 மடங்காக இருக்கும்.

**பொது விடுமுறை நாட்கள் (பிரிவு 25)**

1. (அ) இந்தப் பந்தி மற்றும் 2 ஆம் பந்தி ஏற்பாடுகளுக்கமைவாக ஒவ்வொரு தொழில் தருநரும் 1971 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விடுமுறைகள் சட்ட வழிமுறைக்குள் பின்வருகின்ற பொது விடுமுறைகளை அவரால் பணிக்கமர்த்தப்பட்டுள்ள அனைத்து வேலையாளருக்கும் ஊதியத்துடனான விடுமுறையாக அனுமதிப்பர்.

(1) தமிழ் தைப்பொங்கல் தினம் ;

(2) தேசிய தினம் (பெப்புருவரி 4) ;

(3) மிலாதுன் - நபி (நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த தினம்) ;

(4) சிங்கள- தமிழ் புதுவருடத் தினம்

(5) மே தினம் (மே 1) ;

(6) கிறிஸ்மஸ் தினம் (திசெம்பர் 25).

2. எவ்வாறாயினும் தொழில்தருநர் பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாக முன்னைய பந்தியில் குறிப்பிட்டவாறான அத்தகைய பொது விடுமுறை நாட்களில் எந்த வேலையாளரையும் பணிக்கமர்த்தலாம்.

(i) அந்த நாளில் வேலை செய்தமைக்கான வேலையாளருக்கு நாளாந்த சம்பளத்தின் இரண்டு மடங்கு (மாதத்திற்கு ஏற்புடைத்தான) ஊதியமாக வழங்கப்படும். அல்லது ;

(ii) அந்த நாளில் வேலை செய்தமைக்காக நாட் சம்பளத்திற்கு மேலதிகமாக கொடுப்பனவுடன் கூடிய விடுமுறையை அந்த ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முதல் ஒரு நாளிலோ வேலையாளருக்கு வழங்கப்படும்.

(iii) சுத்திகரிப்பு சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 136) 25 ஆம் பிரிவின் நியதிகளின் பொது விடுமுறையொன்றாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஒரு நாளில் சாதாரண வேலை மணித்தியாலங்களை விஞ்சுகின்ற ஒவ்வொரு மணித்தியாலத்திற்குமான மேலதிக நேர வீதம் நாளாந்த சம்பளத்தை 8 ஆல் வகுத்து பெறப்பட்ட மணித்தியால வீதத்தின் இரண்டு மடங்காக இருக்கும்."

6- 307/4

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.